Registered as a Newspaper

புதிய 4வது பிரிவு
O/L
ஆரம்பம்:
3 - 3 - 86
DAY CLASS-காலை 8 மணி
EVENING CLASS-
பி.ப. 2.15
5, 6, 7, 8 - பி.ப. 2.15
VICKNA
TUITION CENTRE
52. Stanley Road.
JAFFNA.

உதயன்

விலை ரூ-1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

இறுதி மீட்டல்
வகுப்புக்கள்
கலை, வர்த்தகம் 86
ஆரம்பமாகிவிட்டன.
சனி, ஞாயிறு: காலை 8 மணி
DAY CLASS: காலை 8 மணி
குறிப்பிட்ட திகதிக்குப் பின்
அனுமதிகள் வழங்கப்பட
மாட்டாது.
VICKNA
TUITiON CENTRE
52. Stanley Road,
JAFFNA.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸு மாசி மீ 15 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா. ஆகிர் பிறை 17 (27-02-1986) UTHAYAN — A LIVELY TAMIL DAILY கதிர்:87

இலங்கை அரசுக்கு இந்தியா காலக்கெடு

இனப் பிரச்சினைக்கு ஒரு மாதத்திற்குள் தீர்வு

கண்டாக வேண்டும் என அறிவிப்பு

புதுடில்லி, பெப், 26

இனப்பிரச்சினைக்கு ஒரு மாத காலத்திற்குள் தீர்வு கண்டாக வேண்டும்.

இவ்வாறு இலங்கை அரசுக்கு இந்திய அரசாங்கம் காலக்கெடு விதித்து உள்ளது.

இத்தகவலை இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பலிராம் பகத் இன்று (புதன்கிழமை) நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

புதுடில்லிக்கு அழைக்கப்பட்டுள்ள இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற் மூலமாக இந்தியாவின் காலக்கெடு இலங்கை அரசுக்கு அறிவிக்கப்படும் என்றும் திரு.பகத் தெரிவித்தார்.

அ. தி. மு. க. உறுப்பினர் திரு.எஸ்.குழந்தைவேலு உட்பட பல எம்.பி.க்கள் கொண்டு வந்த கவன ஈர்ப்புப் பிரேரணையின் விவாத முடிவில் அமைச்சர் இத்தகவலை அறிவித்தார்.

தமிழர்கள் பாதுகாப்புப் படையினரால் வகைதொகை இன்றிக் கொல்லப்படுகின்றனர்.

அமைதி, பேச்சுவார்த்தைகள், அரசியல் தீர்வு என்று எல்லாம் பேசிக்கொண்டு இலங்கைஅரசு இராணுவத் தீர்வை அடைவதில் தீவிர அக்கறை காட்டி வருகின்றது.

இந்தியா இனியும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது—

இப்படி எம்.பி.க்கள் ஆக்ரோஷமாகக் குரல் எழுப்பினர்.

அப்பாவிகள் கொலை

உறுப்பினர்களுக்குப் பதிலளித்துப்பேசுகையில் வெளியுறவு அமைச்சர் திரு. பலிராம் பகத் சொன்னதாவது:-

இலங்கையில் அப்பாவித் தமிழர் கொல்லப்படுவது சம்பந்தமாக உறுப்பினர்கள் தெரிவித்த புகார்களில் பெருமளவு உண்மை உள்ளது.

இராணுவத் தீர்வில்தான இலங்கை அரசு நாட்டம் காட்டுகின்றது என்று உறுப்பினர்கள் கூறியதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

பாதுகாப்புப் படையினர் அப்பாவி மக்களைக் கொல்வதை இநதியா வன்மையாகக் கண்டிக்கிறது. இது இனப்படுகொலைக்கு ஒப்பாகும்.

விசாரணை வேண்டும்

அப்பாவி மக்களைக் கொன்று ஒழிப்பது குறிதது பாரபட்சமற்ற விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

பயங்கரவாதிகளைக்

(4-ஆம் பக்கம் பார்க்க)



இப்பதான் ராஜீவ் அண்ணை கொஞ்சம் கொஞ்சம் எங்கடை நாட்டு அரசாட்சிக்காறற்றைசுத்துமாத்துகளைக் கண்டு பிடிச்சிருக்கிறார் போலை...

பண்டாரியிடம் தொடர்ந்து பொறுப்பு

ஒப்படைக்கப்படுமா?

ராஜீவ் தீர்மானிப்பார்

புதுடில்லி, பெப். 26

இலங்கை இனப்பிரச்சினையைத் தொடர்ந்து கையாளும் பொறுப்பை திரு. பண்டாரியிடம இந்தியா மீண்டும ஒப்படைக்குமா? அல்லது புதிய ஒருவரிடம் ஒபபடைக்குமா?

இதுபற்றி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி விரைவில் முடிவு எடுக்க இருப்பதாகத் தெரிகிறது.

மார்ச் 31 இல் திரு. ரொமேஷ் பண்டாரி ஓய்வு பெறுகிறார். அடுத்த சிரேஷ்ட அதிகாரியான திரு ஏ. பி. வெங்கடேஷ்வரன் வெளியுறவுச் செயலாளராகப் பதவி ஏற்கப்போகின்றார்.

ஓய்வு பெறும் திரு. பண்டாரியிடம மீண்டும் இலங்கைப் பிரச்சினையை ஒப்படைப்பது என்றால், சிறப்புத் தூதராக திரு. பண்டாரியை நியமிதது ஆகவேண்டும்.

இதனிடையில் 'இந்து' நாளிதழில் பிரபல அரசியல் விமர்சகர் திரு. ஜி. கே. ரெட்டி, திரு. ரொமேஷ் பண்டாரியை 'நொண்டிவாத்து' என்ற (lame duck) நிலையில் இருப்பவர் என்று வர்ணிதது இருக்கிறார்.

இனப்பிரச்சினையைக் கையாண்டு இறுதியில் நொண்டி வாத்து நிலைக்கு வந்துவிட்டார் திரு. பண்டாரி என்பது இதன் கருத்து.

பலாப் பழத்தில் துப்பாக்கிச் சன்னம்

யாழ்ப்பாணம், பெப.27

தாவடிப் பகுதி பலாப் பழங்களினுள் கொட்டை மட்டும் இருக்காது; துப்பாக்கிச் சன்னங்களும் இருக்கும்.

விமானத்தாக்குதலை அடுதது இந்த நிலை ஏற்பட்டு இருக்கிறது.

குமாரசாமி என்பவரின் வீட்டு வளவினுள் உள்ள பலாமரம் ஒன்றில் பலாப்பழம் ஒன்று அழுகிய நிலையில் காணப்பட்டது.

கடந்த திங்கள் (24·2·86) அந்தபலாப் பழம் பிடுங்கப்பட்டது. வெட்டியபோது உள்ளே துப்பாக்கிச் சன்னங்கள் காணப்பட்டன.

விமானத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட வீடுகளில் குமாரசாமியின் வீடும் ஒன்று.

சுபநேரம்

27 - 02 - 1986
வியாழக்கிழமை
சுபநேரம்:
7-59 முதல் 9-29 வரை
ராகுகாலம்;
1-59 முதல் 3-29 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

பகத் பண்டாரி டிக்ஸிற்

புதுடில்லி, பெப். 26

புதுடிலலி வந்து சேர்ந்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திரு. ஜே. என் டிக்ஸிற் இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பலிராம் பகத்தையும், வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரியையும் இன்று சந்தித்துப் பேசினார்.

இலங்கையில் தற்போது நிலவிவரும் சூழ்நிலை, இலங்கை அரசின நடவடிக்கைகள் ஆகியவை பற்றி திரு. டிக்ஸிற் இருவருக்கும் தகவல் தெரிவித்தார்.

தமிழ் குடும்பங்கள்

வெளியேறுகின்றன

யாழ்ப்பாணம், பெப். 27

அக்கரைப்பற்று, தங்கவேலாயுதபுரம் படுகொலையின் பின்னர் அங்கிருந்து பல தமிழ்க் குடும்பங்கள் வவுனியா, யாழ்ப்பாணம் பகுதிகளுக்கு அகதிகளாக வந்துள்ளன.

அக்கரைப்பற்றுப் பகுதியில் இனித் தமிழர் குடியிருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கனேடிய தூதர் யாழ். வருகிறார்

நல்லூர், பெப்.27

கனேடியத் தூதுவர் திரு.ஜி.எம்.கொலகொட் மார்ச் பத்தாம் திகதி விசேஷ விமானமூலம் யாழ்ப்பாணம் வருகிறார்.

இவருடன் கனேடிய அபிவிருத்தி அதிகாரி ஒருவரும் வருகிறார்.

மார்ச் மாதம் 12ஆம் திகதி யாழ். தீயணைக்கும் படைப்பிரிவை கனேடியத் தூதுவர் வைபவரீதியாக ஆரம்பித்து வைப்பார்.

அத்தோடு வை. டபிள்யூ. சீ. ஏ. கட்டடத் திறப்பு விழாவிலும் இவர் பங்கு கொள்வார்.

யாழ்ப்பாணத் தீயணைக்கும் படைப்பிரிவுக்கென மூன்று பேர் பூரணமாக பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

இருபது பேருக்கு தற்போது பயிற்சி வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

தீயணைப்பு சம்பந்தமான ஒத்திகையும் எதிர்வரும் 12ஆம் திகதி நல்லூரில் நடைபெறும்.

தீயணைப்புபடைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டதும் அன்று மாலையே திரு. கொலகொட் கொழும்பு திரும்பி விடுவார்.

யாழ்நகரில் இன்று பேரணி, கடையடைப்பு

தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டிருக்கும் அடக்குமுறைகளுக்கு எதிராக இன்று யாழ் நகரில் பிரமாண்டமான கண்டனப் பேரணி நடைபெறுகிறது. யாழ் நகரில் முழு அளவில் கடையடைப்பு.

வெகுஜனக் கூட்டு அமைப்பின் சார்பில் இந்தப் பேரணி ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறது.

இன்று காலை 9.30 மணிக்கு யாழ் சிவன் கோயிலடிச் சந்தியிலிருந்து இந்தப் பேரணி ஆரம்பமாகும்,

பேரணி நல்லூரைச் சென்றடையும். அங்கு மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அரச ஆயுதப்படைகளின் அட்டூழியங்களைச் சித்திரிக்கும் ஊர்திகள் இந்தப் பேரணியில் இடம் பெறுகின்றன.

'குமுதினி படகுப் படுகொலை' பற்றிய சம்பவத்தைச் சித்திரிக்கும் ஊர்தி—

சங்கிலியன் புனர்வாழ்வுக் கழக அகதிகள் ஏற்பாடு செய்திருக்கும் ஊர்தி ஆகியவை பேரணியில் முக்கிய இடத்தைப் பெறும்.

இன்றைய பேரணிக்கு ஆதரவாக முழு அளவில் கடையடைப்பு நடத்தும்படி யாழ் வர்த்தகர்கள் சங்கம் யாழ்நகர வர்த்தகர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பல் டாக்டர்கள் விவகாரம்

கொழும்பு, பெப். 27

வேலை நிறுத்தத்தில் குதித்திருக்கும் பல்வைத்தியர்கள் உடனடியாக வேலைக்குத் திரும்ப வேண்டும். இல்லையேல் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்படி அமைச்சரவை நேற்று முடிவு செய்தது

அரசாங்க பல் வைத்தியர்களின் சேவையை, அத்தியாவசிய சேவையாக அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

எனினும் பல் வைத்தியர்கள் தமது வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்குத் திரும்ப மறுத்துவிட்டார்கள்.

பதற்றம்

யாழ்ப்பாணம், பெப். 27

நேற்று மானிப்பாய், கோண்டாவில், தெல்லிப்பளை, காங்கேசன்துறை ஆகிய பகுதிகளில் மீண்டும் போர் விமானங்கள் சத்தமில்லாமல் தாழப் பறந்து சென்றதால் மக்கள் பதற்றம் அடைந்தனர்.

அரசியல் கைதிகளுக்கு அக்கியுனோ மன்னிப்பு

கம்யூனிஸ்ட் படைகளுடன் போர்நிறுத்தம்

மணிலா, பெப். 26

பிலிப்பீன்ஸில் உள்ள கம்யூனிஸ்ட் ஆதரவுப் படைகளுடன் போர் நிறுத்தம் செய்யப்படும். அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்படும். பழைய நிலையை மறந்து மக்கள் எல்லோரும் நாட்டு நலனுக்காக உழைக்க வேண்டும்.

இவ்வாறு பிலிப்பீன்ஸின் புதிய ஜனாதிபதி திருமதி கொருசொன் அக்கியுனோ இங்கு தெரிவித்தார்.

நாட்டில் கலவரங்களைத் தவிர்த்து, அமைதியாகப் பணிசெய்து, அதனைப் புனர்நிர்மாணம் செய்வதையே இலட்சியமாகக் கொள்ள வேண்டும் எனவும் புதிய ஜனாதிபதி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

அக்கியுனோ

இதற்கிடையில் திருமதி அக்கியுனோவின் அரசாங்கத்துக்கு தாம் ஒத்துழைப்பு வழங்குவதாக முன்னாள் அமைச்சர்கள் 12 பேர் அறிவித்துள்ளனர்.

உப ஜனாதிபதியும் பிரதமருமான சல்வடோர் லோரல் வெளிவிவகார அமைச்சராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பிலிப்பீன்ஸ் புதிய அரசாங்கத்தை இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் அங்கீகரித்துள்ளன.

முன்னாள் ஜனாதிபதி நாட்டைவிட்டுத் தப்பி ஓடியதும், மணிலா நகரம் எங்கும்ஒரே குதூகலம் காணப்பட்டது.

அக்கியுனோ ஆதரவாளர்கள் வீதிகளில் ஆடிப் பாடி மகிழ்ந்தனர்.

இதேவேளை அமெரிக்கா புதிய அரசுக்கு பொருளாதார உதவி வழங்க வாக்குறுதி அளித்தது. அதேநேரத்தில் மார்க்கோஸை 20 வருடங்களாக அமெரிக்காவுக்கு உதவிய நல்ல நண்பன் என்றும் வர்ணித்தது.

பிலிப்பீன்ஸ் உப ஜனாதிபதி சல்வடோரும் நாட்டு நலனுக்காகத் தமது சொந்த நலனைத் துறந்தமைக்காக மார்க்கோஸைப் பாராட்ட வேண்டும் என்று தெரிவித்தார்.

இலங்கையில் தேர்தல்

எப்போதோ நடக்குமாம்

ஆனால் பிலிப்பீன்ஸ் மாதிரி இருக்காது என்கிறார் ஜே. ஆர்.

கொழும்பு, பெப். 27

உரிய நேரத்தில் பொதுத்தேர்தல் நடத்தப்படும். அத்தேர்தல் நிச்சயமாக பிலிப்பீன்ஸ் தேர்தல் போன்று இருக்காது.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா இப்படிச் சொன்னார்.

திட்டமிடல் அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய பின்னர் ஆஸ்திரேலியாவின் இலங்கைத் தூதராக நியமனம் பெற்றுள்ள டாக்டர் விக்கிரம வீரசூரியாவுக்கு பிரவுபசார வைபவம் நடத்தப்பட்டது.

அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையிலேயே திரு ஜெயவர்த்

(4 ஆம் பக்கம் பார்க்க)

லீவு இல்லை என்றதும் சுட்ட சிப்பாய்

திருகோணமலை, பெப.27

தெஹிவத்தை ஆயுத படை முகாமில் ஒரு இராணுவ சாஜண்டை, சிப்பாய் ஒருவர் சுட்டுக் கொலை செய்தார்.

பின்னர் அந்தச் சிப்பாய் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

சிபபாய் வீடுசெல்ல லீவுகேட்டாராம். சாஜண்ட் லீவு கொடுக்க மறுத்து விட்டார.

உடனே சார்ஜண்டை சிப்பாய்சுட்டார். சாஜண்ட் அந்த இடத்திலேயே இறந்தார்.

பின்னர் சக சிப்பாய்கள் ஓடி வந்து சிபபாயைப் பிடித்துக் கொள்ள முயற்சித்தனர். அச்சமயம் சிபபாய் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்— இப்படி விசாரணையில் வெளிவந்தது.

சாஜண்ட் பெர்னாண்டோ அம்பலாங்கொட வாசி. சிப்பாய் காமினி ருகமவாசி.

பதில்நீதிவான் திரு. எம். கே. செல்லராசா மரணவிசாரணை நடத்தினார்.

சார்ஜண்டின் மரணம் கொலை என்றும் சிபபாயின்மரணம் தற்கொலை என்றும் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

தமிழ்பகுதியிலிருந்து இராணுவ முகாம்கள் நீக்கப்பட வேண்டும்

இணைப்புகுழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப், 27

தமிழ்ப் பகுதிகளில் இருந்து இராணுவ முகாம்கள் நீக்கபபட வேண்டும்.

நேற்று நல்லூர் இந்து விடுதியில் நடைபெற்ற பிரஜைகள் குழுக்களின இணைப்புக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது;-

கையெழுத்து இயக்கம்

(4ஆம் பககம் பார்க்க)

தங்கவேலாயுதபுரம் வாசிக்கு இப்படி ஒரு கஷ்டம்

மனைவி, பிள்ளைகளைத் தேடுகிறார்

யாழ்ப்பாணம், பெப். 27

தங்கவேலாயுதபுரம் படுகொலையைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த கணபதிப்பிள்ளை விஜயன் என்ற அக்கரைப்பற்றுவாசி, தனது மனைவி, பிள்ளைகள், உறவினர்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்.

கணபதிப்பிள்ளை விஜயன் நேற்று மாலை உதயன் அலுவலகம் வந்து

(4 ஆம் பக்கம் பாரக்க)

கடற்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்ட இளைஞர் மரணம்

திருகோணமலை, பெப். 27

திருகோணமலை கடற்படைத் தளத்தில் தடுத்து வைககப்பட்ட 28 வயதான மூதூர் தமிழ் இளைஞர் ஒருவர் இயற்கை மரணம் அடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

திருகோணமலை நீதிவான் சுனில் இராஜபக்ஸ மரண விசாரணை நடததினார்.

மரணமான இளைஞரின பெயர் சுப்பிரமணியம் திருக்குமரன்.

இரத்தத்தில் நஞ்சு கலந்ததால் ஏற்பட்ட இயற்கை மரணம் என்று மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர். சி. சி. கே. செல்லத்துரை தெரிவித்தார்.

இயற்கை மரணம் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்த இளைஞர், பெப்ரவரி 16இல் மூதூரில் கைது செய்யப்பட்டார்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

பாக்கியராஜ் படங்களில்

எம். ஜி ஆர். தலை காட்டுவதேன்?

பாக்கியராஜ் படங்களில் தவறாமல் எம். ஜி ஆர். நடித்த படக் காட்சிகளில் ஒன்று இடம் பெற்றுவிடும்

பாக்கியராஜ் எம். ஜி. ஆர் ஆதரவாளர் என்பதை இது காட்டுகிறதா அல்லது வியாபாரத் தந்திரமா தெரியவில்லை எது எப்படியோ?

ஆனால் பாக்கியராஜ் அது குறித்துக் கேட்டால் இப்படித்தான் சொல்கிறார்:

நான் எம். ஜி. ஆரின் ஆதரவாளர் என்பதைக் காட்டுவதற்கோ அல்லது வியாபாரநோக்கத்திற்காகவோ இப்படிச் செய்வது இல்லை

சிலபடங்களில் காட்சிக்கு ஏற்றபடி அம்மாதிரிக் காட்சிகள் இடம் பெற்றது உண்டு.

ஏன், "சின்னவீடு" படத்தில்கூட எம் ஜி. ஆரின் போஸ்டரை ஒருகட்டத்தில் காட்டியிருக்கிறேன்.

அவருக்கு மக்களிடையே பலத்த செல்வாக்கு உண்டு. சில படங்களில் அவர் ஸ்லாக் சட்டையை மடித்து விட்டுக் கொண்டிருக்கும் ஸ்டைலைப் பார்த்து அழகாக இருக்கிறதே என்று பலர் அதே போல் செய்துகொண்டதும் உண்டு

"தூறல் நின்னு போச்சு" படத்தில் தற்செயலாக நான் மஃப்ளர் போட்டுக் கொண்டு நடித்தேன். படம் வெளியானபின் கோவைப் பக்கம் போனேன்.

எனக்கே அதிசயமாய் இருந்தது. கடைகளில் "பாக்கியராஜ் ஸ்டைல் மஃப்ளர்" என்ற விளம்பரத்துடன் விற்பனை நடந்தது. மஃப்ளருக்கும் பலத்த தட்டுப்பாடு.

சினிமாவினால் பலருக்கு நிஜவாழ்க்கையில் பாதிப்பு உண்டு என்பதை இந்தஅனுபவத்தின்மூலம்தெரிந்து கொண்டேன் என்றார் பாக்கியராஜ்.

பாக்கியராஜ் அரசியலில் தீவிரமாக ஈடுபடப்போகிறார் என்று பேச்சு அடிபடுகிறது. அதுபற்றி அவர் குறிப்பிடுகையில்,

"அப்படி ஒன்றுமில்லை. அரசியலில் ஈடுபட தனித்திறமை தேவை. எனது சினிமாத் துறை வெற்றிக்கும் அரசியலுக்கும் சம்பந்தம் இல்லை" என்றார்.

பர்னாலா அறிவிப்பு

சண்டிகார், பெப். 26

பஞ்சாபில் ஏற்பட்டுள்ள அரசு எதிர்ப்பு மற்றும் வன்முறைகளைக் கட்டுப்படுத்த புதிய உத்திகள் வகுக்கப்படும்.

இவ்வாறு முதலமைச்சர் பர்னாலா சட்டம், ஒழுங்கு பற்றிய விடயங்களை ஆராயும் மாநாடொன்றில் தெரிவித்துள்ளார்.

பல தொகுதிகளாக இந்த இடங்கள் பிரிக்கப்படுமெனவும் மத்திய ரிசேவ் பிரிவு கொமாண்டர் பொறுப்பில் விடப்படும் எனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

அமெரிக்க--ரஷ்ய

ஜெனீவா பேச்சுக்களில் இனிப் பயன் இருக்குமா?

இவ்வாறு சந்தேகப்படுகிறார் மிக்கெய்ல் கொர்பச்சேவ்

மாஸ்க்கோ, பெப். 26

ஆயுதக் குறைப்புத் தொடர்பான அமெரிக்க- சோவியத் பேச்சு வார்த்தைகளை இனி ஜெனீவாவில் தொடர்வதில் பயன் இருக்குமென நம்ப முடியவில்லை.

இவ்வாறு ரஷ்ய அதிபர் கொர்பச்சேவ் அவநம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சோவியத் கொம்யூனிஸ்ட் கட்சியின் 27 ஆவது ஆண்டுக் கூட்டத்தில் உரையாற்றிய பொழுதே இந்தக் கருத்தை அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

ஆயுதக் குறைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக அண்மையில் ஜனாதிபதி றேகன் வெளியிட்டுள்ள கருத்துக்கள் ஆக்கபூர்வமானதாக இல்லை.

அமெரிக்கா தனது ஆயுத விஸ்தரிப்புத் திட்டத்தை அடிப்படையில் வைத்துக் கொண்டிருப்பதை, 3 ஆண்டுகளுக்குள் நடுத்தர ஏவுகணைகளை அகற்றுவது பற்றிய அறிவிப்பு எடுத்துக் காட்டிவிட்டது.

இந்த நிலையில் உலக சமாதானம், பாதுகாப்பு என்ற விடயங்கள் அலட்சியம் செய்யப்பட்டுள்ளன என்றார்.

உலகின் இராணுவ, பொருளாதார, அரசியல் விடயங்கள் ஆராயப்பட்டு சர்வதேச பாதுகாப்புக்கான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

இதற்கு அமெரிக்கா, சோவியத்யூனியன், பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகிய ஐந்து அணு ஆயுத வல்லரசுகளும் கலந்து கொள்ளும் மாநாடு ஒன்று கூட்டப்பட வேண்டும் எனவும் கொர்பச்சேவ் மாநாட்டில் கருத்துக் கூறியுள்ளார்.

மேதை ஜிட்டுவின் இறுதி விருப்பம்

கலிபோர்ணியா,பெப்.26

பிரபல தத்துவமேதை திரு. ஜே. கிருஷ்ண மூர்த்திஇறக்கும் முன்னர் தனதுஇறுதிவிருப்பத்தை வெளியிட்டார்

எனக்கு ஒரு வாரிசு இல்லை. எனது பெயரில் போதனைகளை இப்பொழுதேனும் சரி அல்லது வருங்காலத்தில் எப்பொழுதாவது சரி நடத்துவதற்கு ஒரு பிரதிநிதியும் நியமிக்கப்படவில்லை.

மொழி பெயர்ப்பாளர்கள் தேவை இல்லை. ஒவ்வொருவரும் தனது நடவடிக்கைகளைத் தானே பார்த்துக் கொள்ள வேண்டும்; ஏதாவது தத்துவத்தின் அடிப்படையில் அல்ல.

மேதை கிருஷ்ணமூர்த்தி, கலிபோர்ணியாவில் இறப்பதற்கு முதல் தனது கடைசி விருப்பத்தை வெளியிடுகையில் இப்படிச் சொன்னார். அவரின் விருப்பத்துக்கு இணங்க, இறுதி ஆராதனைகள் எதுவும் நடைபெறவில்லை.

எனினும் அவரின் அஸ்தி அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா ஆகிய நாடுகளில் அவரின் பெயரில் அமைந்துள்ள 3 நிறுவனங்களினால் தூவப்படவுள்ளன.

தனிமையில் நடக்கும் தீர்க்கதரிசி என்ற தலைப்பில் மேதை கிருஷ்ணமூர்த்தி பற்றி விவரணப் படம் இயக்குநர் ஜீ. அரவிந்தன் தயாரித்து இருக்கிறார். திரு. கிருஷ்ணமூர்த்தி உயில் எதுவும் எழுதிவைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா மறுப்பு

பாரிஸ், பெப் 26

பதவி கவிழ்க்கப்பட்ட ஹெயிட்டி ஜனாதிபதி குவாலியரை தனது நாட்டுக்கு திருப்பி அழைத்து புகலிடமளிக்க அமெரிக்கா மறுத்துள்ளது.

இதை பிரான்ஸ் பிரதமர் லோறன்ட்வேபியஸ் கண்டித்துள்ளார்.

அதிருப்தியாளர் கிம்- டா- ஜுங்

சியோல், பெப் 26

தென் கொரிய அதிருப்தியாளர் தலைவர் கிம்-டா-ஜுங்குக்கு எதிரான தடுப்புக்காவல் உத்தரவை அரசு நீக்கியுள்ளது.

அரசுக்கும் எதிர்க் கட்சிகளுக்கும் இடையே ஒரு இணக்க சூழ்நிலை மெல்ல உருவாகி வருவதைக் கண்டே இந்த உத்தரவு நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

வெளி உலகில்

பிலிப்பீன்ஸ் முன்னாள் ஜனாதிபதி

பேர்டினன்ட் மார்க்கோஸ் குவாம் தீவில் இறங்கினார்

மனைவி இமெல்டாவுடன் ஜெனரல் வேர் மற்றும் 60 சகாக்கள் கூடச் சென்றனர்

மணிலா, பெப். 26

எழுச்சிகொண்ட மக்கள் சக்தியால் பதவியிலிருந்து இறங்க நிர்ப்பந்தப்படுத்தப்பட்ட ஜனாதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸ் பசுபிக் தீவான குவாம் தீவில் போய் இறங்கியுள்ளார்.

மணிலாவிலுள்ள அமெரிக்க விமானத் தளமான கிளார்க் தளத்திலிருந்து விசேட விமானமொன்றில் மார்க்கோஸ் அங்கு போய் இறங்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மார்க்கோஸுடன் அவரது மனைவி இமெல்டாவும் ஆயுதப் படைத் தளபதி ஜெனரல் வேர் மற்றும் அவரது 60 நெருங்கிய சகாக்களும் கூடச் சென்றுள்ளதாகவும் அந்தச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்கா தனது நல்ல நண்பரொருவருக்கு புகலிடமளிக்க ஆயத்தமாக இருப்பதாக அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதியாக பதவி ஏற்றுள்ள திருமதி கொறாசன் அக்கியூனோ தனது செய்தியில்; பிலிப்பீன்ஸை படுகுழியில் தள்ளிய 20 வருட மார்க்கோஸ் ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டு விட்டது.

இப்பொழுது பிலிப்பீன்ஸ் மக்கள் தமக்கான ஆட்சியை அமைத்துவிட்டனர் என்றார்.

மணிலாவில் அமெரிக்க தளங்கள்பற்றி அவர் கருத்துத் தெரிவித்த பொழுது;

1991ஆம் ஆண்டுவரை அமெரிக்கா தனது தளங்களை பிலிப்பீன்ஸில் வைத்திருக்க அனுமதிக்கப்படும்.

அதன்பின் மணிலாவின் தன்னாதிக்கத்தையும் உரிமைகளையும் பிறிதொரு நாட்டுக்கு ஒப்படைக்க பிலிப்பீன்ஸ் மக்கள் தயாராக இருக்க மாட்டார்கள் என்று தெரிவித்துள்ளார்.

புதிய அமைச்சரவையை அமைப்பதுபற்றி ஆலோசிப்பதற்கு அவசர கூட்டமொன்றை ஜனாதிபதி கொறாசன் அக்கியூனோ கூட்டியுள்ளார்.

புதிய பிலிப்பீன்ஸ் அரசை உடனடியாகவே அங்கீகரித்துவிட்ட அமெரிக்கா அந்த நாட்டின் பொருளாதார முயற்சிகளுக்கு பூரண உதவி வழங்கும் எனத் தெரிவித்துள்ளது.

தீவிரவாதத்தை எப்படியும் வென்றாக வேண்டும் என்கிறார் லலித்

கொழும்பு, பெப். 27

தீவிரவாதத்தை மந்திரம், தந்திரங்களினால் அடக்க முடியாது. எப்படியும் அதை வென்றாக வேண்டும்.

இப்படித் தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி சொன்னார்.

பன்னல மகாபொல வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில் திரு. அத்துலத் முதலி மேலும் சொன்னதாவது:

1971 கிளர்ச்சியில் நாட்டில் உள்ள பொலீஸ் நிலையங்கள் கைப்பற்றப்பட்டன.

இப்போது நடக்கும் தீவிரவாதம் அதற்கு முரணானது. இன்று தீவிரவாதிகள் தாக்கிவிட்டு ஓடுகிறார்கள்.

இன்றுள்ள தீவிரவாதிகளின் முழுநோக்கமும் பிரபல்யம் பெறவேண்டும் என்பதுதான்.

இவர்களை அடக்கப் பல வழிகளைக் கையாள வேண்டியுள்ளது.

இப்படி அமைச்சர் அத்துலத் முதலி சொன்னார்.

டிராக்டர்களை திருப்பி ஒப்படைக்கக் கோரிக்கை

ஊழியர் வேலை இழக்கும் ஆபத்து

நல்லூர், பெப் 27

கடந்த மூன்று மாதங்களுக்கு முன் யாழ் மாநகர சபையில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட டிராக்டர்களை இனியாவது திருப்பி ஒப்படைத்து தொழிலற்றுப் போகவிருக்கும் ஊழியர்களையும், அவர்களது குடும்பங்களையும் காப்பாற்றுமாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :-

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் யாழ். மாநகர சபையில் இருந்து இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்ட ஏழு டிராக்டர்களும் இதுவரை திருப்பி ஒப்படைக்கப் படவில்லை.

இதனால் யாழ் மாநகர சபைக்கு 15 லட்சம் ரூபா மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

அத்தோடு பல ஊழியர்கள் தொழிலற்றுப் போகும் அபாயமும் தோன்றியுள்ளது.

தற்பொழுது நான்கு டிராக்டர்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுவதால் யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் தேங்கிக்கிடக்கும் குப்பை கூளங்களை உடனடியாக அகற்றுவதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டிருக்கிறது.

எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கூடிய கவனமெடுத்து திருப்பி ஒப்படைக்கும்படி அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

தற்பொழுது மழை பெய்யத் தொடங்கியுள்ளதால் யாழ். மாநகர சபைக்குட்பட்ட சில பகுதிகளில் தேங்கிக் கிடக்கும் குப்பை கூளங்களில் இருந்து துர்நாற்றம் வீச ஆரம்பித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

நவா மினி
(உஷா மினி முன்பாக)
248|5, K. K.S. Road,
JAFFNA.
"ரம்போ"

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

வாராந்த அறிக்கை ஜனாதிபதிக்கு

மட்டக்களப்பு

பிரஜைகள் குழு முடிவு

மட்டக்களப்பு, பெப். 27

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதப்படையினரால் கைது செய்யப்படுவோர், சுட்டுக் கொல்லப்படுவோர், அவமதிக்கப்படுவோர் உட்படப் பல்வேறு விடயங்கள் வாராந்த அறிக்கையாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

இது சம்பந்தமான தீர்மானம் மட்டக்களப்பு பிரஜைகள் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

குழுவின் தலைவர் சட்டத்தரணி திரு. கே. தங்கவடிவேல் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும் அறிக்கையின் பிரதிகளை இணைப்பதிகாரி, தேசிய பாதுகாப்பு அமைச்சர், கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கும் அனுப்பி வைப்பதென முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் மற்றும் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மட்டக்களப்பில் கொள்ளை

மட்டக்களப்பு, பெப். 27

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் உள்ள உபதபாற்கந்தோரில் இருந்து 1. 600 ரூபா பெறுமதியான முத்திரைகள், பணம்செவ்வாய்பிற்பகல் 1. 30 மணியளவில் கொள்ளை இடப்பட்டன. இனந் தெரியாத நபர்கள் திடீரென்று புகுந்து இக்கொள்ளையைநடத்தினர்.

மாதகலுக்கு மருத்துவ மாது

வட்டுக்கோட்டை, பெப். 27

மாதகல் பகுதியில் கடந்த மூன்று வருடங்களாக வெற்றிடமாக இருந்து வந்த மருத்துவ மாது பதவிக்கு இம்மாதம் முதல் புதிய மருத்துவமாது ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாதகல் பகுதியிலுள்ள பொது ஸ்தாபனங்கள் பல இப்பகுதிக்கு மருத்துவமாது ஒருவரை நியமிக்குமாறு கடந்த மூன்று வருடங்களாகக் கோரிக்கை விடுத்து வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

சட்டவிரோத மின்பாவனைக்கு ரூ. 2000 அபராதம்

நாகர்கோயில், பெப். 27

சட்டவிரோத மின் பாவனையாளர்களிடமிருந்து ரூபா 2,000 குற்றப்பணமாக அறவிடப்படவுள்ளது.

யாழ்ப்பாண அபிவிருத்திச் சபை நெல்லியடி உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. கே. சண்முகநாதன் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது;

'சட்டவிரோத மின் பாவனையாளர்களைக் கண்டுபிடிக்குமிடத்து மின்பாவனை தொடர்பான சகல உபகரணங்களும் பறிமுதல் செய்யப்படும். குற்றப்பணமும் அறவிடப்படும்

இவ்வாறு சட்டவிரோத மின் பாவனையாளர்களினால் தேவையற்ற விபத்து நாளாந்தம் ஏற்படுகின்றன. பல உயிர்கள் அநியாயமாகப் பலியாகின்றன.

இதனால் நெல்லியடிப் பகுதியில் கடந்த ஒரு வருடகாலத்தில் பல மின்மாற்றிகள் வெடித்துப் பழுதடைந்து விட்டன. உப மின் நிலையங்கள் மின் சுமையினால் எரிந்து விடுகின்றன.

இப்படி அவர் கூறினார்.

சம்பள உயர்வு வழங்க மனமுண்டு பணம் இல்லையாம்

அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு,பெப்.27

பல் டாக்டர்களுக்கு சம்பள உயர்வு வழங்க கொள்கை அளவில் எமக்குச் சம்மதம். ஆனால் அரசிடம் பணம் இல்லையே!

இப்படிச் சொன்னார், சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து.

பல் டாக்டர்கள் வேலை நிறுத்தம் தொடர்கிறது. சம்பள அதிகரிப்புக் கிடைக்கும் வரை வேலை நிறுத்தம் நடக்கும் என்று பல் டாக்டர்கள் சங்கச் செயலாளர் திருமதி. ராஜிதா சேனரத்தின சொன்னார்.

"அத்தியாவசிய சேவைகள் சட்டத்தையும் மீறி பல் டாக்டர்கள் வேலை நிறுத்தம் செய்கின்றனர். அதனால் ஏற்படும் விளைவுகளை ஏற்கத் தயாராக பல் டாக்டர்கள் இருக்க வேண்டும்" என்று அமைச்சர் சொன்னார்.

மன்னார் தாக்குதலில் காயமடைந்தவர்கள்

யாழ்ப்பாணம்,பெப் 27

செவ்வாயன்று மன்னாரில் இடம் பெற்ற தாக்குதலில் படுகாயமடைந்த பொதுமக்களில் சிலர் பற்றிய விவரம் வருமாறு:-

1. கௌரி இராமகிருஷ்ணன், பெண்,வயது 24 மன்னார் ஸ்ரேசன் வீதியைச் சேர்ந்தவர்.
2. கமல்வாயன் செய்தான்,முஸ்லிம் 35 வயது.
3. மூசா பாத்திமா. பெண் 36வயது.
4. இராமகிருஷ்ணன் சந்திரகாசன் 7 வயதுக் குழந்தை. தலையில் பலத்த காயம்.
5. வதுறு நிஸா.சிறுமி வயது12.
6. செல்லையா தனலட்சுமி. பெண் வயது 23. உப்புக்குளத்தைச் சேர்ந்தவர்.
7. அன்ரனிப்பிள்ளை அந்தோனியா. பெண். 34வயது. மன்னார் பள்ளிமுனை வாசி.
8. அந்தோனிப்பிள்ளை மேரி. சிறுமி. வயது 11.
9. தவராஜா பிலோமினா. பெண். 30வயது. உப்புக்குளத்தைச் சேர்ந்தவர்.
10. சோமசேகரம் கலாவதி. பெண். 35 வயது. உப்புக்குளம் வாசி.
11. எஸ். செல்லையா. 29 வயது.

காயமடைந்த மேலும் பலர் மன்னார் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

சுருவில் இளைஞர் சங்க நூல்நிலையம்

ஊர்காவற்றுறை, பெப் 27

சுருவில் இளைஞர் சங்கத்தினர் புதிய நூல்நிலையம் ஒன்றை அமைக்கத் தீர்மானித்துள்ளனர்.

தற்போது உள்ள கட்டடத்தின் ஒரு பகுதியிலேயே இது இயங்கும்.

தாதிகள் சங்கமும் முஸ்தீபு

கொழும்பு, பெப். 27

அரசு ஆஸ்பத்திரித்தாதிகள் சங்கமும் சம்பள உயர்வு கேட்டு வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்து உள்ளது.

தாதிகள் சங்கம் இடைக்கால சம்பள அலவன்ஸாக 750 ரூபா கேட்டுள்ளது.

இது கிடைக்காவிட்டால் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக சங்கம் அரசுக்கு அறிவித்துள்ளது.

விற்பனையாகிறது

விஞ்ஞானம் ஆண்டு-7: 7 00, விஞ்ஞானம் ஆண்டு-8 : 8.50- திருமதி சி. குணரட்ணம் (விஞ்ஞான ஆசிரியை) (1986 தை முதல் அமுலுக்கு வந்த புதியபாடத்திட்டத்திற்கு அமைய எழுதப்பட்டது. விற்பனையாளர்கள்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். தொலைபேசி23631 தந்தி Books Jaffna.

விற்பனைக்கு

முட்டை, புரொயிலர் கோழி (Broller) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சற்குணராஜா பிறதர்ஸ் பிரம்படி, கொக்குவில். 660,கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

இலவசம்

இப்பில் இப்பில் விதைகள் இலவசமாகப் பெற்றுக்கொள்ள சுயவிலாசமிட்ட - 75 சத முத்திரையொட்டிய லோங் என்வலப் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். மில்க்-வைற், யாழ்ப்பாணம்

விற்பனைக்கு

"றெயிலர் (Trailor) விற்பனைக்கு உண்டு. தொடர்பு . . ." மில்க்-வைற், யாழ்ப்பாணம்.

உதய சங்கற்பம்

நடமாடும் தெய்வம் மக்கள்.
மக்களுக்குச் சேவை செய்யுங்கள்
மக்கள் சேவை மகேசன் பூசை.
- திருமூலர்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 10, 2வது ஒழுங்கை [illegible] வீதி யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805 22078
27-02-86 [illegible]

பிலிப்பீன்ஸ் மாற்றம் இலங்கைக்கு ஒரு பாடம்

பிலிப்பீன்ஸ் மக்கள் வென்றுவிட்டார்கள். அவர்களது போராட்டத்துக்கு வெற்றி கிடைத்துவிட்டது. மக்கள் சக்தியின் ஆற்றலும், மகா வல்லமையும் உலகுக்குப் புரிய வைக்கப்பட்டுள்ளது.

மக்களை மதிக்காதவர்களுக்கு, அவர்களின் அபிலாஷைகளைப் பொருட்படுத்தாதவர்களுக்கு நல்லதொரு பாடம் புகட்டப்பட்டிருக்கிறது.

மார்க்கோஸ் பிலிப்பீன்ஸ் நாட்டின் ஜனாதிபதியாக 20 வருடங்கள் இருந்தவர். தமது ஆட்சியைக் காலத்துக்குக் காலம் பலப்படுத்தி தமது பதவியை ஸ்திரமாக்கிக் கொண்டவர்.

அண்மையில் நடந்த தேர்தலில் மக்கள் தமக்கு எதிராக வாக்களிக்கப் போகிறார்கள் என்பதை அறிந்து, அதனைத் தடுக்கப் பல மோசடிகளைச் செய்தார்.

தேர்தல் முடிவுகள் - மக்கள் தீர்ப்பு தமக்கு எதிராக இருந்தபோதிலும் அதனை மறைத்து தமக்கே வெற்றி என்று அறிவித்தார். அதுமட்டுமன்றி தாமே ஜனாதிபதி எனப் பிரகடனப்படுத்தி சத்தியப்பிரமாணமும் செய்துகொண்டார்.

செவ்வாய்க்கிழமை காலையில் ஜனாதிபதியாகச் சத்தியப் பிரமாணம் எடுத்தார். மாலையில் அதனை ராஜினாமாச் செய்து நாட்டைவிட்டுத் தப்பி ஓடவேண்டியதாயிற்று.

மார்க்கோஸுக்கு அரசியலில் அவரது மனைவி என வர்ணிக்கப்பட்ட அமெரிக்காவே அவரைக் கைவிட்டுவிட்டது. தேர்தல் மோசடிகளைச் செய்தார் என்பதால் மட்டுமன்றி, மக்கள் மார்க்கோஸுக்கு எதிராக உள்ளனர் என்பதையும் அமெரிக்கா நாடி பிடித்துப் பார்த்துவிட்டது தனது தேவைக்கு ஏற்றபடி மார்க்கோஸை கைப்பொம்மையாகப் பயன்படுத்திவிட்டு இப்போது தூக்கி எறிந்துவிட்டது.

தேர்தலை அவதானிக்க விசேஷ குழுவை அனுப்பியதோடு மட்டும் நிற்காது தேர்தல் முடிந்தவுடன் விசேஷ தூதுவரையும் அமெரிக்க ஜனாதிபதி அனுப்பி இருந்தார்.

பிலிப்பீன்ஸ் மக்களின் சக்தியை உணர்ந்து மார்க்கோஸை பதவி இறக்கக் கோரியது அமெரிக்கா. அசத்தே ஒரு பெரிய திட்டத்தை வைத்துக்கொண்டு அமெரிக்கா அப்படி நடந்திருப்பதாக உலக அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

எது எப்படி இருப்பினும் பிலிப்பீன்ஸில் மக்களுக்குக் கிடைத்த வெற்றி மற்ற நாடுகளுக்கு ஒரு நல்ல உதாரணமும் முன்னோடியும் எனலாம்.

மார்க்கோஸ் ஒரு காலத்தில் அதாவது இருபது வருடங்களுக்கு முன்னர் மக்கள் வாக்குகளால் அவர்கள் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் பதவிக்கு வந்தவர்தான். பதவிக்கு வந்தவருக்கு அதனை விட்டுப்பிரிய மனம் இடம்தரவில்லை.

தேர்தல்களைத் தனக்குச் சாதகமாக்கியும் இராணுவச் சட்டம் மூலம் பதவிக் காலத்தை நீடித்தும் ஒரு சர்வாதிகாரியானார். அமெரிக்காவை துணைக்கு வைத்துக் கொண்டு, அதற்குத் "தாஜா" பண்ணிக் கொண்டு தாமே தலைமைப் பதவியில் நீடித்தார்.

தன்னை விட்டால் வேறு எவரும் இல்லை என்ற மமதை வளர்ந்தது. பதவி ஆசையால் ஆணவம் வளர்ந்தது. இராணுவ பலத்தால் மக்கள் சக்தியை அடக்கி விடலாம் என்று மனப்பால் குடித்தார். அவ்வாறு செய்ய முடியவில்லை.

திரு. மார்க்கோஸின் அனுபவம் உலகின் ஏனைய பல நாடுகளின் தலைமைப் பதவியில் உள்ளவர்களுக்கு ஒரு பாடமாக அமையட்டும்.

இராணுவ பலத்தால் தமிழ் மக்களின் குரலை நசுக்கி, உரிமைகளைப் பறித்து ஆட்சி நடத்தலாம் என எண்ணிவரும் இலங்கை அரசாங்கம் பிலிப்பீன்ஸ்—மார்க்கோஸ்—மக்கள் என்ற முத்தரப்பில் வைத்து தனது செயற்பாடுகளை ஆராயட்டும்.

தம்மிடம் பெரும்பான்மை வாக்குப் பலமும் ஆட்பலமும் இருந்தால் தமிழ் மக்களைத் தாம் அடக்கி ஒடுக்கி ஆளலாம் அல்லது அழித்தொழித்து விடலாம் என்று எண்ணக் கூடாது.

தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க ஒன்று திரண்டு எழும்போது, அரசாங்கத்தின் பலம் சுக்குநூறாக்கப்படும் சாத்தியம் உண்டு. அதை மறந்து விடக்கூடாது. மக்கள் எழுச்சி எதனையும் வீழ்ச்சியுறச் செய்யும் என்ற பாடத்தைப் படிக்கட்டும்.

அதிகாரம், ஆணவம், மமதை, அநியாயம், அக்கிரமம், அடக்கி வைத்தல் ஒருபோதும் நிலைத்தது இல்லை. இதனை அரசாங்கங்கள் மட்டுமன்றி ஒவ்வொரு தனி மனிதனும் உணர்ந்தால் உலகின் பல பிரச்சினைகள் குறைந்துவிடும்.

பிரச்சினை குறித்து உரையாடல்

மட்டக்களப்பு பெப். 27

மட்டக்களப்பு பிரஜைகள் குழுவினர் மட்டக்களப்பு இணைப்பு அதிகாரியை எதிர்வரும் முதலாம் திகதி மீண்டும் சந்தித்து இப்பகுதி பிரச்சினைகள் குறித்து உரையாடுவார்கள்.

மார்க்கோஸை விரட்டிய மக்கள் பேரலை

அவரது எழுச்சியும் வீழ்ச்சியும்

-- எஸ். ஜி. --

பெப்ரவரி 7 பிலிப்பீன்ஸின் சரித்திரத்தில் மறக்க முடியாத தினம். 5 கோடி 80 லட்சம் மக்கள் வாழும் அந்த நாட்டில் இரண்டரைக் கோடிக்கு அதிகமான வாக்காளர்கள் புதிய ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்ய அன்று வாக்களித்தனர்

தேர்தல் மோசடிக்குப் பெயர் பெற்ற பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி தேர்தலை மேற்பார்வையிட அமெரிக்க அதிகாரிகள் குழு, 19 நாடுகளில் இருந்து தேர்தல் அவதானிகள் குழு முதலியன மணிலாவை முற்றுகை இட்டன.

தேர்தல் மோசடிகள் இடம் பெற்றால் அவற்றை எப்படியும் கண்டுபிடிக்கக் கூடிய வழிவகைகள் உள்ளதாக 19 நாடுகளை சேர்ந்த அவதானிகள் குழு அறிவித்தது.

அமெரிக்க அதிகாரிகள் குழுவும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து இருந்தது.

உலக நாடுகளில் இருந்து பத்திரிகையாளர்கள் டெலிவிஷன் படப்பிடிப்பாளர்கள் ஆகியோரும் மணிலாவை முற்றுகை இட்டனர்.

இதன் மத்தியில் ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு பெப்ரவரி 7 இல் ஆரம்பமானது. 86,000 வாக்களிப்பு நிலையங்களில் காலை 7மணி முதல் பிற்பகல் 3மணி வரை வாக்களிப்பு இடம் பெற்றது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டவர்கள் இரண்டு பேர்.

ஒருவர் தான் 20 ஆண்டுகளாக ஜனாதிபதியாக இருந்த பேர்டினன்ட் மார்க்கோஸ் வயது 68.

1965 இல் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டவர் 1969 இல் இரண்டாவது தடவையாகத் தெரிவு செய்யப்பட்டார்

கம்யூனிஸ அபாயம் உள்ளதாகக் கூறி 1972 இல் இராணுவச் சட்டத்தை பிறப்பித்தார்.

புதிய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் அவரே ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் 1973 இல் தெரிவானார்.

1980 வரை இராணுவச் சட்டம் நீடித்தது. பின்னர் 1981 ஜூன் தேர்தலில் மீண்டும் மார்க்கோஸ் ஜனாதிபதியாகத் தெரிவானார். புதிய சமூக இயக்கம் என்ற பெயரிலான அரசியல் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டார்.

மற்றவர் திருமதி கொருசின் அக்கியூனோ. 1980 ஆம் ஆண்டில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த செனெட்டர் பெலின்கோ அக்கியூனோவின் மனைவி இவர்.

திரு அக்கியூனோ. வைத்திய சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றிருந்தார். தாயகம் திரும்பிய போது 1983 இல் மணிலா விமான நிலையத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதன் பின்னர் தான் திருமதி அக்கியூனோ அரசியலில் பிரபலம் பெறத் தொடங்கினர்.

ஐக்கிய தேசிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்டார்.

தேர்தல் முடிந்து வாக்குகள் எண்ணிக்கை ஆரம்பமானது.

அதிக வாக்குகளைப் பெற்றுமுன்னணியில் நிற்பதாக மார்க்கோஸும் அக்கியூனோவும் போட்டி போட்டுக்கொண்டு அறிவிக்கத் தொடங்கினர்.

வாக்குகள் எண்ணத் தொடங்கும் முன்னரே திரு.மார்கோஸ் சொல்லி விட்டார் தனக்கு 1 கோடி 36 லட்சம் வாக்குகள் கிடைக்கும் என்றும் திருமதி அக்கியூனோவுக்கு 1கோடி 2லட்சத்து 81 ஆயிரம் வாக்குகள் கிடைக்கும் என்றும்.

எண்ணும் வேலைகள் தொடங்கும் முன்னரே எப்படி திரு. மார்க்கோஸால் சொல்ல முடிந்தது?

"35லட்சம் வாக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தன— என்று மணிலாவின் புகழ் பெற்ற 'பிஸ்நஸ் டே' சஞ்சிகை கூறியிருந்தது.

வாக்குகள் எண்ணப்படுவதில் குளறுபடிகள் ஏற்பட்டன உடனே தேர்தல் ஆணைக்குழு வாக்குகள் எண்ணப்படுவதை நாடாளுமன்றத்திடம் ஒப்படைத்தது.

பாதுகாப்புக்கு அபாயம் ஏற்பட்டால் வாக்குகள் எண்ணப்படுவதை வேறு இடங்களுக்கு மாற்ற தேர்தல் ஆணைக் குழுவிற்கு நாடாளுமன்றம் மூலம் ஏற்கனவே அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

இச்சட்ட விதிகளின் கீழ, வாக்குகள் எண்ணப்படுவது இடம் மாற்றஞ் செய்யப்பட்டது.

அதன்படி நாடாளுமன்றம் வாக்குகளை எண்ணி திரு. மார்க்கோஸ் ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டியதாக அறிவித்தது.

உலக அவதானிகள் குழுக்கள் தேர்தலில் மோசடி செய்தே திரு. மார்க்கோஸ் வெறன்தாக அறிவித்தன அமெரிக்க அதிபர் றேகனும் அதையே சொன்னர்.

இந்த நிலையில் திருமதி அக்கியூனோவின் ஆதரவாளர்களுடன் திரு மார்க்கோஸின் பாதுகாப்பு அமைச்சரும் இராணுவ உதவித் தலைவரும் சேர்ந்துகொண்டனர்.

டெலிவிஷன் நிலையங்கள், வானொலி நிலையங்கள், பொலீஸ் தலைமைக் காரியாலயம் கிளர்ச்சிக்காரர்களினல் கைப்பற்றப்பட்டன.

ஜனாதிபதியாக திருமதி அக்கியூனோவும் பதவிப் பிரமாணம் செய்தார் திரு மார்க்கோஸும் பதவிப் பிரமாணஞ் செய்து கொண்டார்.

ஜனாதிபதியாக திரு. மார்க்கோஸ் செய்த பதவிப் பிரமாண நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட முடியாது போயிற்று. ஒளிபரப்பை கிளர்ச்சிக்காரர்கள் துண்டித்துவிட்டனர்.

"கிளர்ச்சியை நசுக்க முடியும். இரத்தம் சிந்துவதை நான் விரும்பவில்லை.

இப்படி சொன்னர் திரு. மார்க்கோஸ்

பதவி துறக்கும்படி அமெரிக்காவும் இறுதியில் மார்க்கோஸை நிர்ப்பந்தித்தது.

இறுதியில் திரு. மார்க்கோஸ் மணிலாவிலிருந்துதப்பி ஓடிவிட்டார்

திருமதி அக்கியூனோ ஜனாதிபதியானர்.

மைக்கல் அடிகளுக்கு பிரியா விடை

யாழ்ப்பாணம், பெப். 27

முல்லைத்தீவுக்கு மாற்றலாகிச் செல்லும் பங்குத் தந்தை எட்மண்ட் மைக்கல் அடிகளாருக்கு மல்லாகம் புதுமைமாதா ஆலயத்தில் பிரிவுபசார விழா நடத்தப்பட்டது

மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு சி. வி. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

யாழ் மாவட்டசபை முன்னாள் தலைவர் திரு எஸ். நடராசா, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, தெல்லிப்பளை கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராசா, உதவி அரசாங்க அதிபர் திரு. சி. இராஜரெட்ணம் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இரவு விருந்துபசாரம், கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

83-க்குப் பின்பு 4,500 தமிழர் கொலை: 65,000 பேர் அகதிகள்

வலி - வடக்கு பிரஜைகள் இணைப்புக் குழுக் கூட்டத்தில் உரை

காங்கேசன்துறை, பெப்.27

1983-ஆம் ஆண்டிலிருந்து சுமார் 4,500தமிழ் மக்கள் கொலை செய்யப் பட்டுள்ளனர். இதில் 2090, பேர் குடும்பத்தலைவர்கள். 65ஆயிரம் பேர் வரை அகதிகள் ஆகியுள்ளனர். இம்மக்கள் தமது வாழ்க்கையைத் தொடர்வதற்கு எம்மாலான உதவிகள் அளிக்க வேண்டியது எமது கடமை.

தெல்லிப்பளை ப.நோ. கூ. சங்க மண்டபத்தில் இடம்பெற்ற வலிவடக்கு பிரஜைகள் இணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து உரையாற்றிய அகதிகள் புனர் வாழ்வுக்கழகத்தலைவர் திரு. கே. விசுவலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. சி. இராஜரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"எமது சகோதரர்கள் சகோதரிகள் ஏன் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

கௌரவமாக வாழ வேண்டும் என்ற விருப்பில் எழுந்த உத்வேகமே இதற்குக் காரணமாகும்.

ஆகவே அவ்வாறு உயிரிழந்தவர்களுக்கு நாம் முடிந்த அளவில் கைம்மாறு ஆற்ற வேண்டும். எமது மததியில் பிச்சை எடுக்கும் சமுதாயம் ஒன்று உருவாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அகதிகள் புனர் வாழ்வுக் கழகம் பல்வேறு உதவிகளையும் அளித்து வருகிறது.

இதற்கு பெருமளவில் நிதி தேவைப்படுகிறது. அகதிகளானவர்களைப் பராமரிக்க மாதம் ஒன்றுக்கு 5 லட்சம் ரூபா தேவைப்படுகிறது.

இதற்கெல்லாம்மேற்கு நாடுகளிலிருந்து உதவி

(4 ஆம் பக்கம் பார்க்க)

பொய்யாமொழி

குறள்:

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

பொருள்:

விருந்தோம்புதலாகி வேள்வியின் பயன் இவ்வளவு என்று அளவு படுத்திக் கூறத்தக்கது அன்று; விருந்தினரின் தகுதிக்கு ஏற்ற அளவினதாகும்

மாசார்க் கிராமத்தில் 35 குடும்பங்களை குடியமர்த்த ஏற்பாடு

கிளிநொச்சி, பெப். 27

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மாசார்க் கிராமம் மாதிரிக் கிராமமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இங்கு சுமார் நாற்பது ஏக்கர் காணியில் முப்பத்தைந்து குடும்பங்களைக் குடியமர்த்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோவில் வயல், சேரன் பற்று ஆகிய கிராமங்களில் இருந்து வசதி குறைந்த கீழ்த்தர வகுப்பினர் சுமார் 35 பேர் காணிக் கச்சேரி மூலம் தெரிவு செய்யப்படுவர்.

இவர்களுக்கு தலா ஒரு ஏக்கர் வீதம் காணி வழங்கவும், வீதி அமைக்கவும், சனசமூக நிலையம் ஒன்றை அமைக்கவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. என். ஐயநாதன் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இவ்வாறு இவர்களில் தெரிவு செய்யப்பட்ட 35 விண்ணப்பதாரர்களுக்கு சுய முயற்சி மூலம் வீடமைக்க சுமார் இரண்டரை லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மார்ச் மாதம் இத்திட்டம் ஆரம்பிக்கப்படும் எனவும் முகாமையாளர் தெரிவித்தார்.

இதனைத் தவிர கிராம மட்டங்களில் மேசன், தச்சு வேலைப் பயிற்சியாளர்களை தெரிவு செய்து அவர்களுக்கு கிராம மட்டத்தில் வைத்து முதல் ஆறு மாத காலத்திற்கு முதல் கட்டப் பயிற்சி வழங்கி வருகின்றோம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 27 கிராம சபை [illegible] 84 ஆம், 85 ஆம் ஆண்டு 108 பேர் தெரிவு செய்யப்பட்டு முதல் கட்டப் பயிற்சி வழங்கப்பட்டது.

இவர்களில் 46 பேர் முதல் கட்டப் பயிற்சியில் சித்தி பெற்று இரண்டாம் கட்டப் பயிற்சியைப் பெறுவதற்காக யாழ்ப்பாணம் பல்தொழில் நுட்பக் கல்லூரிக்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ளனர்.

இப்படி கிளிநொச்சி மாவட்ட தேசிய அபிவிருத்தி அதிகார சபை முகாமையாளர் திரு. பி. யேக்கப் மரியான் தெரிவித்தார்.

மானிப்பாய் தர்மருக்கு இந்துபோர்ட் நிர்வாக சபைக் கூட்டத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப். 27

இந்து போர்ட் நிர்வாக சபைக் கூட்டத்தில் மானிப்பாய் தொகுதி முன்னாள் எம். பி. யான அமரர் வி. தர்மலிங்கத்துக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

கூட்டத்திற்கு தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமை வகித்தார்.

அச்சமயம் திரு கனகநாயகம் சொன்னதாவது:

தர்மத்துக்கும் தருமருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

அகால மரணம் அடைவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்புகூட திரு தர்மலிங்கம் நிர்வாக சபைக் கூட்டத்துக்கு சமுகமளித்து இருந்தது இதை வலியுறுத்துகின்றது.

இந்து போர்ட் நிர்வாகம், திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கம், சைவ அநாதைகள் இல்லம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக திரு. தர்மலிங்கம் அதிக ஈடுபாடு காட்டி வந்தார்.

இப்படி தலைவர் தனது உரையில சொன்னர். டாக்டர் ரீ. பகிரதன், யாழ் பரமேஸ்வரக் கல்லூரி இயக்குநர் சபைப் பிரதிநிதி திரு. ச. விஜயரத்தினம், திரு ஆர் ஏ. ரட்சகன், சட்டத்தரணிகள் செ. மகேசன், எம். எஸ். சுந்தரலிங்கம் திரு. எஸ். செல்வராஜா, [illegible] இரத்தினம், [illegible] சிங்கம், ஆகியோரும் கலந்து கொண்டனர்.

யாழ். பகுதி ஆஸ்பத்திரிகளுக்கு

மருந்துவகை விநியோகம்

பண்டத்தரிப்பு, பெப். 27

யாழ் குடா நாட்டில் உள்ள அரச வைத்திய சாலைகளுக்குரிய முதலாம் தவணைக்குரிய மருந்து வகைகள் தற்போது விநியோகிக்கப்படுகின்றன

மருந்துவகைகளை யாழ் பிராந்திய சுகாதார சேவை அத்தியட்சகர் காரியாலயத்தில் வந்து பெற்றுக்கொள்ளும்படி சகல வைத்தியசாலைகளின் பொறுப்பு அதிகாரிகளும் கோரப்பட்டுள்ளனர்.

வாகன வசதிகள் இல்லாத காரணத்தினல் மருந்துவகைகளைக் கொண்டு வந்து தரமுடியாமல் இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட காலத்துக்குள் மருந்துகளை பெற்றுக்கொள்ளாவிடில், அந்த வைத்தியசாலைகளில் போதுமான மருந்துகள் இருப்பில் உள்ளது என்று எடுத்துக்கொள்ளப்படும் என்றும் சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பிலிப்பீன்ஸ் பின்னணித் தகவல்கள்

பசுபிக் சமுத்திரத்துக்கும் தென்சீனக் கடலுக்கும் இடைப்பட்ட 7,107 தீவுக்கூட்டங்களே பிலிப்பீன்ஸ் குடியரசாகும்.

880 தீவுகளில் தான் மக்கள் வாழ்கின்றனர்.

அமெரிக்காவின் குடியேற்றத்திட்ட நாடாக 48 ஆண்டுகள் பிலிப்பீன்ஸ் இருந்து வந்தது.

உலகில் ஆங்கிலம் பேசும் மூன்றுவது பெரிய நாடு இதுவாகும். மலாய் ஸ்பானிய, சீனவின் தொடர்புகளும் பிலிப்பீன்ஸுக்கு உண்டு.

300 ஆண்டுகளாக ஸ்பானிய தேச குடியேற்றத்திட்டங்கள் பிலிப்பீன்ஸில் இடம் பெற்று வந்தன. இதன் காரணமாகப் பெரும்பாலான பிலிப்பினோக்கள் ரோமன் கத்தோலிக்க சமயத்தினர். தென்பகுதியில் முஸ்லிம் பிரிவினைவாத இயக்கம் ஒன்று இயங்குகிறது.

மக்கள் கீழ் நடுத்தர வகுப்பினர். சனத்தொகை 27 சதவீதமாக குறைந்துள்ளது. ஒருவரின் சராசரி வருமானம் 2.9 சதவீதமாக அதிகரித்துள்ளது.

அரிசி, சோளம் முதலியனவற்றுடன் கருப்பு, தென்னை, வாழை. அன்னசி செய்கையிலும் பிலிப்பீன்ஸ் ஈடுபட்டுள்ளது.

சுரங்கத் தொழில் வளர்ச்சியடைந்து வருகிறது. வெள்ளி, தங்கம், இரும்புமங்கனீஸ்பித்தளை போன்ற கனிப்பொருள்கள் அங்கு உள்ளன.

நாட்டின் அரைப்பகுதி காடு. பிலிப்பீன்ஸின் கரையோரம் உலகிலேயே ஆறுவது பெரிய இடத்தை வகிக்கிறது. இதனல் மீன்பிடித்தல் முக்கிய தொழிலாக மிளிர்கின்றது

ஸ்பெயின் நாடுதான் முதலில் பிலிப்பீன்ஸ் நாட்டைக் கண்டுபிடித்தது. பிலிப்பீன்ஸ் நாட்டு பழங்குடிகள் அதற்கு முன்னர் இந்தியா, சீன அரேபியா நாடுகளுடன் தொடர்பு வைத்து இருந்தனர்.

1565 இல் ஸ்பெயின், இங்கு குடியேற்றம் செய்தது. 1898 இல் பிலிப்பீன்ஸ் அமெரிக்காவுடன் இணைந்து கொண்டது. ஸ்பானிஷ்-அமெரிக்க யுத்தத்தைத் தொடர்ந்து இந்த இணைப்பு ஏற்பட்டது.

1942 இல் இருந்து 1945 வரை ஜப்பானிய ஆட்சி நிலவியது.

4. 7. 1946 இல் பிலிப்பீன்ஸ் சுதந்திரம் பெற்றது.

பேர்டினன்ட் மார்க்கோஸ், ஒரு கெரில்லா வீரராக ஜப்பானிய ஆட்சியை எதிர்த்துப் போராடியவர்.

முஸ்லிம் பிரிவினைவாத இயக்கம் 1980இல் ஆரம்பமானது. மின்டானோ மாநிலத்தில்தான் இந்த இயக்கம் வேரூன்றி உள்ளது.

தலைநகர்: மணிலா. (சனத்தொகை 16 லட்சம்)

நாட்டின் சனத்தொகை: 5கோடி 21 லட்சம்

1973-83 சனத்தொகை வளர்ச்சி: 2. 7 சதவீதம்

2000 ஆவது ஆண்டில் எதிர்பார்க்கப்படும் சனத்தொகை: 7 கோடி 30 லட்சம்.

விஸ்தீரணம்; 115, 830 சதுர மைல் (300,000 சதுர கிலோ மீட்டர்)

சமயம்; 85 சதவீதம் ரோமன் கத்தோலிக்கம், 5 சதவீதம் இஸ்லாம்.

மொழிகள்: பிலிப்பினோ (தகலொக் அடிப்படையில் உருவான புது மொழி), ஆங்கிலம், ஸ்பானிஷ்.

டாக்டர் தொகை: 1,191 பேர்களுக்கு ஒரு டாக்டர்.

டெலிவிஷன் பெட்டிகள்: 52 பேருக்கு ஒரு பெட்டி.

பத்திரிகைகள்: 15

(4ம் பக்கம் பார்க்க)

சமுத்திரா மல்ரி சேவிசஸ்
* மின்சார உபகரணச் சேவை
* வீடியோ புகைப்படச் சேவை
* திருமண ஒழுங்குகள்
சமுத்திரா மல்ரி சேவிசஸ்
கிளைகள்:
முருகமூர்த்தி லேன், நெல்லியடி–கரவெட்டி.
கே.கே.எஸ். வீதி, தெல்லிப்பளை.

உதயன்

27. 02. 1986

சமுத்திரா மல்ரி சேவிசஸ்
* திருமண சேவை
* காணி வாங்கி விற்கும் சேவை
* உள்ளூர் உற்பத்திச் சேவை
* கட்டட ஒப்பந்தம்
சமுத்திரா மல்ரி சேவிசஸ்
(கோண்டாவில் சந்தி)
303, பலாலி வீதி, கோண்டாவில்.

இனப்பிரச்சினை தீர்வு

இந்திய முயற்சி தொடரவேண்டும்

ஐரோப்பிய பொருளாதார சமூகம் கோரிக்கை

ஹேக், பெப். 26

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளை தொடரும்படி ஐரோப்பிய பொருளாதார சமூகம் இந்தியாவைக் கேட்டுள்ளது.

ஐரோப்பிய பொருளாதாரசமூகத்தின் 12 வெளிநாட்டு அமைச்சர்கள் ஹேக்கில் கடந்த செவ்வாய்க்கிழமை கூட்டம் ஒன்றை நடத்தினர்.

அந்தக் கூட்டத்தின் முடிவில் இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்க எடுக்கும் நடவடிக்கைகளுக்காக இந்தியாவை நாம் பாராட்டுகின்றோம்.

இனப் பிரச்சினை தீர்வு காணப்படாமல் நீடிப்பது துரதிருஷ்ட வசமானது இது குறித்து நாம் கவலைப்படுகின்றோம்.

ஐக்கிய இலங்கைக்கு உட்பட அரசியல் தீர்வு ஒன்றைக் காணும்படி ஐரோப்பிய பொருளாதார சமூகம் இலங்கை அரசையும் போராளிகளையும் கேட்டுக் கொள்கிறது.

மேற்கண்டவாறு ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் தீர்மானம் கோருகிறது.

ரயில் பாதையின் குறுக்கே மரம்

கொழும்பு, பெப். 27

ரயில் பாதையில் பெரிய மரம் ஒன்று வெட்டி வீழ்த்தப்பட்டதனால் பதுளை – கொழும்பு ரயில் 7 மணித்தியாலங்கள் தாமதமாகவே பதுளை போய்ச் சேர்ந்தது.

நானுஓயாவுக்கு அருகில் வட்டகொடை என்னும் இடத்தில் இந்த மரம் வெட்டி வீழ்த்தப்பட்டிருந்தது.

இது விஷமிகள் வேலையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அனைத்தையும் இழந்த சுதுமலை வாசி

யாழ்ப்பாணம், பெப். 27

வெளிநாட்டில் உழைத்துக் கொண்டுவந்த அனைத்தையும் பறிகொடுத்த சுதுமலைவாசி ஒருவரின் கதியை சுதுமலைப் பிரஜைகள் குழு தெரியப்படுத்தி உள்ளது.

செ. இராசலிங்கம், சுதுமலை வாசி. வயது வந்த இரண்டு பெண்களின் தந்தை.

நான்கு ஆண்டுகள் வெளிநாட்டில் வேலை செய்துவிட்டு அண்மையில் வீடு திரும்பினர். கொஞ்சப் பொருள்களைக் கையோடு கொண்டுவந்தார். மிகுதியைக் கப்பலில் ஏற்றிவிட்டிருந்தார்.

மதவாச்சியில் வைத்து இவர் வழிமறிக்கப்பட்டார். கொண்டுவந்த பணமும் பொருள்களும் பறிக்கப்பட்டன.

கப்பலில் வந்த அவரின் பொருள்களை ஏற்றிக் கொண்டு வந்த லொறி, நுணாவிலில் வைத்து மறிக்கப்பட்டது

அந்தப் பொருள்களும் கொள்ளைபோனது.

சேருநுவர நிலக்கண்ணி:

ஊர்காவல் படையினர்: 55 இராணுவத்தினர் 25 பேர் பலி

யாழ்ப்பாணம், பெப். 27

சேருநுவர நிலக்கண்ணி வெடியில் 55 ஊர்காவல் படையினரும் 25 இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை விவரம் வருமாறு;

தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் ஆயுதங்களுடன் இனவெறிக் காடையரைக் குடியமர்த்தும் முயற்சிகள் ஸ்ரீலங்கா அரசால் காலங்காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே ஊர்காவல் படையினரும் சிங்களக் காடையரும் அரச படையினருடன் இணைந்து திட்டமிட்ட தமிழின ஒழிப்பில் ஈடுபட்டு வந்தது எம் மக்கள் நன்கறிந்த ஒன்றே.

அண்மைக் காலங்களில் புது முயற்சியாக தமிழ்க் கிராமங்களை தொடர்ச்சியாகச் சுற்றிவளைத்து மக்களைக் கைதுசெய்து கொன்று குவித்து தமிழ்ப் பெண்களைக் கடத்திச் சென்று, தமிழ் இனத்தை அக்கிராமங்களில் இருந்து அப்புறப்படுத்தியபின் பயிற்சி பெற்ற சிங்களக் காடையரைக் குடியமர்த்தும் முயற்சிகள் நடைபெற்று வந்தன

இந்த வகையில் கடந்த 19-02-86 அன்று பயிற்சி பெற்ற காடையரை இராணுவப் பாதுகாப்புடன் ஆயுதங்களுடன் குடியமர்த்தும் முயற்சியாக அல்லை-கந்தளாய் வீதியில் சேருநுவர என்ற இடத்தில் 5 வாகனங்களில் இராணுவத்தினருடன் ஊர்காவல் படையினரும் வந்துகொண்டிருந்தனர்.

அத்தொடரில் மூன்றாவதாக வந்த அசோக் லெய்லன்ட் லொறிக்கு கண்ணிவெடி வைத்ததில் கதவுகளிலும் கூடாரத்திலும் தொங்கிக்கொண்டு வந்தவர்களுமாக 25 இராணுவத்தினரும் 55 ஊர்காவல் படையினரும் அந்த இடத்திலேயே பலியாகினர். லொறி சுக்கு நூறாகியது. சம்பவம் நடந்த தினத்தன்று நடைபெற்ற ஒரேயொரு தாக்குதல் இதுவாகும்.

திட்டமிட்ட இக்குடியேற்ற நடவடிக்கைக்கெதிராக எடுக்கப்பட்ட முயற்சி தமிழ்ப் பகுதிகளை சிங்களமயமாக்கும் முயற்சிகளுக்கே சாவு மணி அடித்துள்ளது

இத்தாக்குதலின்போது திறமையாகச் செயற்பட்ட போராளிகள் ஆறுமுகம், பெரியவன் என்ற இரு வீரர்களும் வீரமரணம் அடைந்தனர்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

வீதியில் நின்றோர் ஆமி வாறான் என்றனர்

நான் வானிலிருந்து குதித்தபோது சூடு விழுந்தது

நல்லூர், பெப், 27

வானில வந்து கொண்டிருந்த பொழுது வீதியில் நின்றவர்கள் ஆமி வாறான் எனக் கத்தினர். உடனே வானை விட்டு வெளியே குதித்தேன் அப்பொழுது சீருடையினர் சுட்டனர் இதனால் எனது காலில் காயம் ஏற்பட்டது.

செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவில் சீருடையினர் சுட்டதினால் வேலுப்பிள்ளை கயிலைநாதன் (23 வயது) காலில் காயம் அடைந்தார்.

அவர் யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த சமயம் எமது செய்தியாளரிடம் மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் செயமலையைச் சேர்ந்தவர். இடது குதிக்காலில்காயம்ஏற்பட்டுள்ளது. கடற்றொழில் செய்து வருபவர்.

சம்பவம் பற்றி அவர் மேலும் சொன்னதாவது

செவ்வாய்க்கிழமை 11 மணி அளவில் முல்லைத்தீவில் இருந்து சிலாபம் நோக்கி வானில் போய்க் கொண்டிருந்தேன்.

வானுக்குள் ஏழு பேர் மட்டும் இருந்தோம். அப்பொழுது எமது வான் முல்லைத்தீவு பார்ச்சந்தியை அண்மித்ததும் வீதியில் நின்றோர் ஆமி வாறான் என்று கூறினர்கள்.

உடனே வான் நிற்பாட்டப்பட்டது. நான் வெளியில் குதித்தேன். எங்கேயோ மறைந்திருந்த சீருடையினர் என்னை நோக்கிச் சுட்டனர்.

இதனால் எனது காலில் காயம் ஏற்பட்டது வேறு சீருடையினர் எமது வாகனத்தை நோக்கி வந்தனர். எம்மையும் வாகனத்தையும் பூரண சோதனைக்குட்படுத்திய பின் என்னையும் மற்றுமொருவரையும் அதே வாகனத்தில் அழைத்துச் சென்றனர்.

என்னை முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டு மற்றவரை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

பின்னர் நான் வேறு வாகன மூலம் யாழ் வைத்தியசாலைக்கு வந்து சேர்ந்தேன்.

இப்படி அவர் சொன்னார்.

83கருப...

(3 ஆம்பக்கத் தொடர்ச்சி)

கள் கிடைக்கின்றன.

கிறிஸ்தவ மதத்தைப்பின் பற்றுபவர்கள் மற்றவர்களுக்கு உதவும் அடிப்படையில் இதனை வழங்குகிறார்கள்

நாமும் எமது சகோதரர்களுக்கு உதவ முடிந்தளவில் உதவி செய்ய முன்வரவேண்டும். எமது ஆலயங்களில் பூஜைகள் உற்சவங்கள் அவசியமானாலும் எமது மக்களுக்கு உதவுவதே இன்று தலையாய பணி என்பதை உணரவேண்டும்'' இப்படி அவர் கூறினர்.

யாழ். பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. இ. பாலசுப்பிரமணியம் பேசுகையில்,

பிரஜைகள் குழுக்களின் அவசியத்தை இன்று நாம் உணர முடிகிறது அவற்றின் மூலம் பல நிவாரணங்களைப் பெற முடிந்துள்ளது.

போட்டி, பூசல்கள் இல்லாத சபையாக விடுதலை பெறும்வரை அதற்கு குந்தகம் இல்லாத வகையில இச்சபை இயங்க வேண்டும்.

எமக்கு ஏற்படும் அநீதிகள், இழப்புகள் குறித்து முழு விவரங்களையும் ஆதாரபூர்வமாக சேகரிக்க வேண்டும் என்றார்.

மற்றும் மயிலிட்டி பிரஜைகள் குழுத் தலைவர் திரு. வி. தேவராஜன் அடிகள் காங்கேசன்துறை பிரஜைகள் குழுத் தலைவர் சட்டத்தரணி அ. குமாரகுரு தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராசா உட்பட பலர் உரையாற்றினர்.

இலங்கை அரசுக்கு . . . .

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

கொல்வதும் அப்பாவித் தமிழர்களைக் கொல்வதும் ஒன்றாக இருக்க முடியாது.

அப்பாவி மக்களைக் கொல்வதை நிறுத்த வேண்டும். இது சம்பந்தமாக இலங்கை அரசு உறுதிமொழி தரவேண்டும்.

போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்று கையெழுத்திடப்பட்டது. பெரும்பாலும் யுத்த நிறுத்த உடன்படிக்கை மீறப்பட்டே வந்துள்ளது.

பாதுகாப்புப் படையினர் நாகரிக நெறிகளுக்கு அப்பாற்பட்டே செயல்படுகின்றனர்.

அறுவடையில் ஈடுபட்டு இருந்த அப்பாவித் தமிழ் விவசாயிகளை படையினர் கொன்றுள்ளனர்.

ஆயுத உதவி பெறுகிறது

பல வழிகளாலும் பெறும் உதவியுடன் ஆயுதஉதவியைஇலங்கை அரசு பெற்று வருகின்றது.

காலங்கடந்துகொண்டு இருக்கிறது. பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் இலங்கை விரைந்து செயல்படவேண்டும்.

ஒரு மாதகாலத்தினுள் இனப்பிரச்சினைக்கு இலங்கை அரசு தீர்வு காணவேண்டும்.

இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற்றை புதுடில்லிக்கு அழைத்துள்ளோம். அவர்மூலம் இந்தியாவின் காலக்கெடு இலங்கை அரசுக்குஅறிவிக்கப்படும்.

இதனிடையில் பேச்சுக்கள் மூலம் தீர்வுகாணும் விருப்பத்தை இலங்கை அரசு தெரியப்படுத்தி உள்ளது—

இவ்வாறு அமைச்சர் திரு. பகத் சொன்னார்.

பிலிப்பீன்ஸ் .....

(3ஆம் பக்கத்தொடர்ச்சி)

நாளிதழ்கள் உட்பட 300 சஞ்சிகைகள்.

ஆயுதப்படையினர்;
இராணுவம்: 70 000
விமானப்படை: 16 800
கடற்படை: 14,675

நாணயம்: 'பெஸோ, என்று அழைக்கப்படுகிறது.

காலநிலை: ஜூன் இல் இருந்து அக்டோபர் [illegible] மழை. நவம்பரில் இருந்து மே வரை கோடை.

— அலுவலகத்தார்.

இலங்கையில ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தன மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

திரு. ஜெயவர்த்தன மேலும் சொன்னதாவது

பொதுத்தேர்தல் இந்த ஆண்டும் நடக்காது. அடுத்த ஆண்டும் நடக்காது. ஆனால் உரிய நேரத்தில் நடத்தப்படும்.

தேர்தலை எப்போது நடத்த வேண்டும் என்று எவரும் எனக்கு உத்தரவிட முடியாது

உரிய நேரத்தில் நடத்தப்படும். பொதுத் தேர்தல் நிச்சயம் பிலிப்பீன்ஸ் [illegible] இருக்காது.

இப்படி திரு. ஜெயவர்த்தன சொன்னார்.

விளையாட்டரங்கு

பெண்கள் ஹொக்கி ஆட்டத்தில் வெற்றி தோல்வியில்லை

சிறப்பாக விளையாடிய இந்து மகளிர் வீராங்கனைகள்

—விளையாட்டுச் செய்தியாளர் சண். ஜோண்சன்—

யாழ்ப்பாணம், பெப். 27

நேற்று நடைபெற்ற பெண்கள் ஹொக்கி ஆட்டம் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது.

யாழ் பல்கலைக்கழகப் பெண்கள் அணிக்கும் யாழ் இந்து மகளிர் கல்லூரி அணிக்கும் இடையில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் எந்த அணியும் கோல் போடவில்லை.

யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் இந்து மகளிர் கல்லூரி அணி வீராங்கனைகள் சிறப்பாக விளையாடிய போதிலும் பல கோல்போடும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டதனால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

கல்லூரியில் முதற் தடவையாக அணி உருவாக்கப்பட்ட பின்னர் முதல் முறையிலேயே, பல வருடங்கள் அனுபவமுள்ள பல்கலைக்கழக அணியுடன் சளைக்காமல் மோதிய ஆட்டத்தைப் பலரும் பாராட்டினர்கள்.

பெருந் தொகையான ஆண், பெண் ரசிகர்களுக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டிக்கு நடுவர்களாக கே பூபாலசிங்கம் எஸ். எஸ். இரத்தின சபாபதி ஆகியோர் கடமையாற்றினர்.

பல்கலைக்கழகம் — கிறுஸ்கொப்பேர்ஸ்

வெற்றி - தோல்வியில்லை

இரண்டு அணிகளுக்கும் தலா இரண்டு கோல்

யாழ்ப்பாணம், பெப் 27

யாழ். பல்கலைக்கழக அணிக்கும் தெல்லிப்பளை கிறுஸ்கொப்பேர்ஸ் அணிக்கும் இடையில் நேற்று நடைபெற்ற ஹொக்கி போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இரு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் போட்டன.

ஆட்டம் ஆரம்பமானவுடன் கிறுஸ்கொப்பேர்ஸ் அணி வீரர்கள் ஒரு கோலைப் போட்டனர்.

ஆட்டநேர இடைவேளைவரை பல்கலைக்கழக அணியின் ஆட்டம் சோபிக்கவில்லை.

இடைவேளையின் பின்னர் தமது வழமையான ஆட்டத்தை ஆடத் தொடங்கிய பல்கலைக்கழக அணி இறுதி நேரத்தில் அபாரமாக ஆடி இரண்டு கோல்களைப் போட்டது.

கிறுஸ்கொப்பேர்ஸ் அணி வீரர்களும் பல்கலைக்கழக அணிக்கு சளைத்தவர்கள் அல்லர் என்பதைப்போல ஆடி, ஆட்டம் முடிவடைய 5 நிமிடங்கள் இருக்கையில் ஒரு கோலைப் போட்டு கோல் எண்ணிக்கையைச் சமப்படுத்தினர்.

கிறுஸ்கொப்பேர்ஸ் அணியின் சார்பில் ஆர். ரேகான் இராஜசிங்கம் இரண்டு கோல்களையும் போட்டார்.

பல்கலைக்கழக அணியின் சார்பில் பி. பத்மநாதன், கே. சந்தானம் ஆகியோர் தலா ஒரு கோலைப் போட்டனர்.

இந்த ஆட்டத்திற்கு திரு. கே பூபாலசிங்கம், திரு. சி நடேசன் ஆகியோர் நடுவர்களாக கடமையாற்றினர்கள். இந்த ஆட்டம் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

பல்கலைக்கழக அணி வெற்றி

சாந்தகுமார் விளாசினர்

யாழ்ப்பாணம், பெப். 27

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் ஆட்டத்தில கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை யாழ் பல்கலைக்கழக அணி தோற்கடித்தது

யாழ் பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியிலேயே யாழ் பல்கலைக்கழகம் மூன்று விக்கெட்டுக்களினால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்து அணி 43 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றது

மதிதரன் சிறப்பாக ஆடி 76 ஓட்டங்களையும் லோகன், விமல்ராஜ் ஆகியோர் முறையே 39, 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

மகிந்தா 3 விக்கெட்டுக்களையும் மெலனியஸ், ரகுராகவன், சாந்தகுமார் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

அடுத்து துடுப்பெடுத்தாடிய யாழ் பல்கலைக்கழக அணி 42. 3 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றது.

கே. சாந்தகுமார் அபாரமாகஆடி 14பவுண்டரிகள் 2 சிக்சர்கள் உட்பட 98 ஓட்டங்களையும் மெலனியஸ் 30 ஓட்டங்களையும் ரி. எஸ். வரதன் ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களையும் பெற்றனர்.

துஷ்யந்தன், சதீஸ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தங்கவேலாயுத ...

(1ஆம்பக்கததொடர்ச்சி)

தனது அவலநிலையைச் சொன்னார்.

கண் கலங்க அவர் சொன்னதாவது ;-

அக்கரைப்பற்று-சாகாமம் வீதியில் 8ஆம் குறிச்சியில் வாழ்ந்து வந்தேன்.

தங்கவேலாயுதபுரம் படுகொலையைத் தொடர்ந்து எனது வீடு எரிக்கப்பட்டது இதுபோன்று நூற்றுக்கணக்கான வீடுகள் எரிக்கப்பட்டன. நான் அவசரமாக பஸ்ஸில் ஏறி யாழ்ப்பாணம் வந்துவிட்டேன். மனைவி, குழந்தைகள், உறவினர்களை வரும்படி கூறிவிட்டே வந்தேன்.

அவர்களும் ரயிலில் யாழ். வந்துவிட்டதாக அறிந்தேன். ஆனால் அவர்களைச் சந்திக்க முடியாமல் உள்ளது.

நான் தற்சமயம் 186, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் தங்கி உள்ளேன்.

எனது மனைவி, குழந்தைகளைக் கண்டுபிடித்து உதவுங்கள்.

இப்படி கணபதிப்பிள்ளை விஜயன் சொன்னார்.

விஜயனின் மனைவி பெயர் லூக்காஸ் கமலா. மகனின் பெயர் விஜயகுமார்.

தமிழ்பகுதி . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பிக்கப்பட்ட போது நிலவிய சூழல் இப்பொழுது முற்றிலும் மாறுதல் அடைந்து இராணுவத் தாக்குதலகளின் அளவும், முறையும் கொடூரமும் அதிகரிக்கப்பட்டிருப்பதால் வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளில் வாழும் தமிழர்களாகிய நாம் இன்றைய நிலையில் முன்வைப்பது இந்த இனக்கொலை உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென்னும் கோரிக்கையே.

தரைத்தாக்குதல்களாகவும், கடலிலிருந்து விடப்படும் ஷெல்களாகவும் தொடங்கிய இராணுவத் தாக்குதலகள் ஹெலிக்கொப்டரிலிருந்து வெளிவரும் துப்பாக்கிச் சூடாக விரிந்து இன்று அந்நிய நாட்டவர் மீது ஏவப்படும் தாக்குதல்கள் போன்று ஆகாய விமானத்தின் குண்டுமாரித் தாக்குதலாக மாறியுள்ளன.

இது இப் பகுதிகளின் மனித வாழ்க்கையையே பூண்டோடு அழிக்கும் ஒரு முயற்சியாகஉள்ளது

இந்த இன அழிப்பு முயற்சிகள் நிறுத்தப்படுமென்பதற்கு அரசு தரக்கூடிய ஒரேயொரு உத்தரவாதம்; தமிழ்ப்பிரதேசங்களிலுள்ள இராணுவ நிறுவனங்கள் சகலவற்றையும் உடன் நீக்குவதே.

அன்றிருந்த நிலையில் முதலில் சனநெருக்கடியான இடங்களிலிருந்து பின்னர் மற்றைய இடங்களில் இருந்தும் நீக்கப்படல் வேண்டுமென்ற கருத்துடன் கையெழுத்து இயக்கத்தை ஆரம்பித்த நாம் இன்று. இராணுவத் தாக்குதலகளின் அமானுஷத்தன்மை கட்டுமீறிச் செல்வதை நோக்கி, தமிழர் பகுதிகளிலிருந்து இராணுவ நிறுவனங்கள் யாவும் எவ்வித ஐயத்துக்கும் இடமில்லாத வகையில் உடனடியாக நீக்கப்படவேண்டுமென்று கோருகிறோம்.

இன்றைய நிலையில் அரசு தமிழ் மக்களுக்கு அளிக்கக்கூடிய நம்பகரமான ஒரேயொரு உறுதிப்பாடு வடக்கு,கிழக்கு, மலையகப் பகுதிகளிலிருந்து இராணுவ முகாம்களை அகற்றுவதே யாகும்.

இப்படித் தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.

எமது புதிய வெளியீடுகள்:
கார்த்திக் - பானுப்பிரியா
பாடும் பறவைகள்
(தரமான பிரதி)
விஜயகாந்த் - நளினி
“கருமேடு கருவாயன்”
(Pyramid Master)
அர்ஜுன் - இளவரசி
“சிகப்புக் கிளி”
(Pyramid Master)
குணம்
வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷப்ரூ உமா எக்ஸ்போர்ட்ஸ் லிமிடெட். 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ் பாணம.
வெளியிட்ட திகதி 27-02-1986.